Registered as News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM    PEOPLES DAILY    மக்கள் தினசரி

நாதம்: 02    திருவள்ளுவர் ஆண்டு 2022    ஐப்பசி 21 (07-11-1991)    வியாழக்கிழமை    ஓசை 262

## முன்னோடிப் பரீட்சை சிலபாடசாலைகளில் இல்லை

யாழ். கல்விக்கோட்டத்திலுள்ள சில பாடசாலைகளில் க. பொ. த. (சா) 1991 இற்கான முன்னோடிப் பரீட்சை நடைபெறவில்லை. முன்னோடிப் பரீட்சை சம்பந்தப்பட்ட அதிபர்களால் கைவிடப்பட்டதாகத் தெரிகிறது என். தெற்கு கொத்தணிப் பாடசாலையான வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் மேற்படி பரீட்சை நேற்றுக்காலை நேரசூசிகைப்படி நடைபெறாததால் அதிபரின் காரியாலயத்திற்கு 11ஆம் ஆண்டு மாணவர் படையெடுத்து பரீட்சையை நடாத்தும்படி கோரினர் பிரச்சினைக்குரிய காலமாக இருந்ததால் மாணவர் தொகையைக் கணக்கெடுத்துக் கண்டுபிடித்து பரீட்சைக் கட்டணமான தலா 50 (4ஆம் பக்கம் பார்க்க)

# சார்க் உச்சி மாநாடு குழம்பியது
# பிரேமா அரசுக்கு பெரும் அவமானம்

## எறிகணை, பீரங்கி தாக்கு

பூநகரி பள்ளிக்குடாப் பகுதியில் அமைந்துள்ள சிறிலங்கா இராணுவ முகாம்மீது விடுதலைப் புலிகள் எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டனர்.

நேற்றுக்காலை 10 மணியளவில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட எறிகணைத்தாக்குதலினால் இராணுவ தரப்பிற்கு ஏற்பட்ட சேத விபரங்கள் இதுவரை இடைக்கவில்லை.

(4ஆம் பக்கம் பார்க்க)

## கடைசி நேரத்தில் இந்தியா, பூட்டான் பின்னடிப்பு

(கொழும்பு)

கொழும்பில் இன்று நடைபெற இருந்த ஆறாவது சார்க் உச்சி மாநாடு காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது. இதனை சார்க் மாநாட்டின் தற்போதைய தலைவரும், மாலைதீவு ஜனாதிபதியுமான அப்துல் கயூம், நேற்று மதியம் உத்தியோக பூர்வமாக அறிவித்தார். 'சார்க்' உச்சி மாநாட்டிற்கான சகல விதமான ஏற்பாடுகளும் முடிவடைந்த நிலையில் மாநாடு காலவரையறையின்றி ஒத்திப் போடப்பட்டமை சிறிலங்கா அரசிற்குப் பெரும் அவமானத்தை ஏற்படுத்தியுள்ளது.

பூட்டான் மன்னர் வாங்சுக் உள்நாட்டு அரசியல் அலுவல்கள் காரணமாக மாநாட்டில் கலந்து கொள்ளாமையே மாநாடு பிற்போடப்பட்டமைக்கு காரணம் என உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த முதலாம் திகதி பூட்டான் மன்னர் மாநாட்டில் பங்கு பற்ற முடியாது என அறிவித்தபோதே உச்சி மாநாடு நடைபெறுமா என்ற சந்தேகம் அரசியல் வட்டாரங்களில் எழுந்தது. மன்னரை மாநாட்டில் பங்குபற்ற வைக்க சிறிலங்கா அரசாங்கம் தீவிரமுயற்சி எடுத்தும் பயன் ஏதும் கிட்டவில்லை.

பூட்டான் மன்னர் வாங்சுக் மாநாட்டில் பங்குபற்றாவிடில் அவரின் அதிகார பூர்வ பிரதிநிதி கலந்து கொண்டால் மாநாட்டை நடத்தலாம் என சிறிலங்கா அரசு தரப்பு மாற்று திட்டம் ஒன்றை முன் வைத்தது. ஆனால் இந்தியா ஏனைய ஆறு உறுப்பு நாடுகளின் அரசுத் தலைவர்களும் மாநாட்டில் பங்கு பற்ற வேண்டும் என பிடிவாதமாக நின்று கொண்டது.

இந் நிலையில் 'சார்க்' அமைப்பு நாடுகளைக் கலந்தாலோசித்துவிட்டு, மாநாட்டை காலவரையறையின்றி ஒத்தி போடுவதாக தற்போதைய தலைவர் மாலைதீவு ஜனாதிபதி அப்துல் கயூம் அறிவித்த

(4ஆம் பக்கம் பார்க்க)

## பாகிஸ்தான், பங்களாதேஷ், மாலைதீவு அரசுத் தலைவர்கள்

## 'உயிரினும் மேலானது தாயகம்' மாவீரர் மக்களுக்கு உணர்த்தினர்

மாவீரர்கள் இந்த மண்ணில் பிறந்தவர்கள். தாம் பிறந்த மண்ணை, மக்களை மனதார நேசித்தவர்கள், மண்ணை மீட்கவும், மக்களைக் காக்கவும் போராடி மரணத்தைத் தழுவிக்கொண்டவர்கள். இவ்வாறு மாவீரர் வாரத்தை முன்னிட்டு தமிழீழ மாவீரர் நாள் குழு வெளியிட்ட செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

மேலும் 'இளம் வயதிலேயே சொந்தபந்தங்களைத் துறந்து, சுயசந்தோஷங்களையும் இன்பங்களையும் வெறுத்து விடுதலை இலக்கை நோக்கிய நீண்டதொரு பாதையில் பயணம் தொடர்ந்தவர்கள் காட்டையும், முட்கள் நிறைந்த பற்றைகளையும் உறைவிடமாக்கிக்கொண்டவர்கள், காற்றிலும் மழையிலும் கடும்கோடை வெயிலிலும் கண்துயிலாது எல்லைகளில் காவல் நின்றவர்கள். கடும் போர்செய்து எதிரிகளை சரித்தமைக்கு, உயிரையே அர்ப்பணித்து உதாரண புருஷர்களாகி விட்டனர்கள்.

இந்த மாபெரும் தியாகத்திற்கு மதிப்பளிக்கும் விதமாக நாம் என்ன கைமாறு செய்யப்போகின்றோம் என்பதை மாவீரர் நாளில் மக்கள் தெளிவாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்தச் சிந்தனை சுயமானதாகவும் உணர்வுபூர்வமானதாகவும் இருக்க வேண்டும். இந்த மாவீரர்கள் தேசத்திற்காகவும் சமூகத்திற்காகவும் செய்த தியாகத்தை மீட்டுப்பார்ப்பதாகவும் அவர்களின் பணியை

பூட்டான் மன்னர் வாங்சுக் உள்நாட்டு அரசியல் அலுவல்கள் காரணமாக மாநாட்டில் கலந்து கொள்ளாமையே மாநாடு பிற்போடப்பட்டமைக்கு காரணம் என உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த முதலாம் திகதி பூட்டான் மன்னர் மாநாட்டில் பங்குபற்ற முடியாது என அறிவித்தபோதே உச்சி மாநாடு நடைபெறுமா என்ற சந்தேகம் அரசியல் வட்டாரங்களில் எழுந்தது. மன்னரை மாநாட்டில் பங்குபற்ற வைக்க சிறிலங்கா அரசாங்கம் தீவிரமுயற்சி எடுத்தும் பயன் ஏதும் கிட்டவில்லை.

பூட்டான் மன்னர் வாங்சுக் மாநாட்டில் பங்குபற்றாவிடில் அவரின் அதிகாரபூர்வ பிரதிநிதி கலந்து கொண்டாவது மாநாட்டை நடத்துவதென சிறிலங்கா அரசு மாற்று திட்டம் ஒன்றை முன் வைத்தது. ஆனால் இந்தியா அனைத்து உறுப்பு நாடுகளின் அரசுத் தலைவர்களும் மாநாட்டில் பங்கு பற்ற வேண்டும் எனப் பிடிவாதமாக நின்று கொண்டது.

இந் நிலையில் 'சார்க்' அங்கத்துவ நாடுகளைக் கலந்தாலோசித்துவிட்டு, மாநாட்டை காலவரையறையின்றி ஒத்தி போடுவதாக தற்போதைய தலைவர் மாலைதீவு ஜனாதிபதி அப்துல் கயூம் அறிவித்

(4 ஆம் பக்கம் பார்க்க)

...களை காக்கவும் போராடி மரணத்தைத் தழுவிக்கொண்டவர்கள். இவ்வாறு மாவீரர் வார்த்தை முதன்விட்டு தமிழீழ மாவீரர் நாள் முழு வெளி... யும் இன்பங்களையும் வெறுத்து விடுதலை இலக்கை நோக்கிய நீண்டதொரு பாதையில் பயணம் தொடர்ந்தவர்கள் காட்டையும், முட்கள் நிறைந்த பற்றைகளையும் உறைவிடமாக்கிக்கொண்டவர்கள், காற்றிலும் மழையிலும் கடும்கோடை வெயிலிலும் கண்துயிலாது எல்லைகளில் காவல் நின்றவர்கள். கடும் போர்செய்து எதிரிகளை விரட்டியடித்தவர்கள். 'உயிரிலும் மேலானது தாயகம்' என்பதை உதட்டளவில் உச்... ளாக நாம் என்ன கைமாறு செய்யப்போகின்றோம் என்பதை மாவீரர் நாளில் மக்கள் தெளிவாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்தச் சிந்தனை சுயமானதாகவும் உணர்வுபூர்வமானதாகவும் இருக்க வேண்டும். இந்த மாவீரர்கள் தேசத்திற்காகவும் சமூகத்திற்காகவும் செய்த தியாகத்தை மீட்டுப்பார்ப்பதாகவும் அவர்களின் பணியை ஒரு குறியீடாக வெளிப்படுத்துவதாகவும் அமையும் வித

(4 ஆம் பக்கம் பார்க்க)

# திரைமறைவில் நடைபெற்ற இராஜதந்திர சதித்திட்டம்

## இந்தியா மீது கொழும்பு சந்தேகம்

(கொழும்பு)

ஆறாவது 'சார்க்' மாநாடு ஒத்திவைக்கப்பட்டமைக்கு இந்தியாவே காரணம் என கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரவலாக நம்பப்படுவதாகவும், சில அரசாங்க உயர் அதிகாரிகள் இந்தியா மீது சீற்றம் கொண்டுள்ளதாகவும் ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆதேவேளை சார்க் மாநாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தி சிறிலங்கா ஜனாதிபதியை இந்திய இராஜதந்திர வட்டாரங்கள் வஞ்சம் தீர்த்துக் கொண்டதாக கொழும்பிலுள்ள வேலைநாட்டு இராஜதந்திரிகள் வட்டாரங்கள் கருதுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பூட்டான் மன்னர் வாங்சுக் மாநாட்டில் கலந்துகொள்ளாததற்கு தெரிவித்த காரணங்கள் பொருத்தமுடையதாக தெரியவில்லை என்றும் இந்தியாவிற்கும் பூட்டானுக்கும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பாகிஸ்தான், பங்களாதேஷ், மாலைதீவு அரசுத் தலைவர்கள் கொழும்பிற்குராஜியவிஜயம்

(கொழும்பு)

தென்னாசியப் பிராந்திய நாடுகளின் ஒத்துழைப்பு அமைப்பான 'சார்க்'கின் ஆறாவது உச்சிமாநாட்டை கொழும்பில் நடத்துவதற்கு இலங்கை அரசாங்கம் மேற்கொண்டிருந்த விசேட ஏற்பாடுகளைக் கவனத்திற் கொண்டு, மாலைதீவு ஜனாதிபதி மாமூன் அப்துல் கயூம், பாகிஸ்தான் பிரதமர் ஜனாப் நவாப்ஷெரீப், பங்களாதேஷ் பிரதமர் பேகம் கலிதா ஸியா ஆகியோர் கொழும்புக்கு ராஜிய விஜயமொன்றை மேற்கொண்டு உள்ளனர்.

இன்று காலை எட்டுபதினைந்து மணிமுதல் இவர்களுக்கு ஜனாதிபதி செயலகத்தில் வரவேற்பு வழங்கப்படும் பின்னர் பிற்பகலில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பொது வரவேற்பு இவ் அரசுத் தலைவர்களுக்கு வழங்கப்படும். பின்னர் சுததாஸா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி பிரேமாவுக்கு யாழ். எம்.பிகள் ஆட்சேபம்

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்தினால் யாழ். மாவட்டத்திற்கு அனுப்பப்பட்ட அரிசிமணிதபாவனைக்கு உகந்ததல்லானசுட்டிக்காட்டி யாழ். மாவட்ட எம்.பிக்கள் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு அவசர செய்தி ஒன்றை அனுப்பியுள்ளனர்

யாழ். மாவட்ட எம் பிக்களான எட்வேட் செபஸ்தியாம் பிள்ளை, கே. சி. சிவஞானம் ஆகியோர் அனுப்பியவந்துள்ள இக்கடிதத்தில் யாழ். மாவட்டத்திற்கு வந்த அரிசி பழுதடைந்த நிலையில் உள்ள

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முன்னுதாரணம் ஏற்படுத்த நாம் விரும்பவில்லை

### - எட்வர்டோ பலீடோ

(கொழும்பு)

பூட்டான் மன்னர் கலந்து கொள்ளாது ஏழாவது சார்க் உச்சி மாநாட்டை நடத்துவது குறித்து கருத்து வெளியிட்ட இந்திய வெளியுறவுத்துறை இணை அமைச்சர் எட்வர்டோ பலேடோ ''ஒரு சிறிய முன்னுதாரணத்தை ஏற்படுத்த நாம் விரும்பவில்லை'' என்று தெரிவித்தார்.

கொழும்பில் செய்தியாளர்கள் மாநாட்டில் நிருபர் ஒருவரின் கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறுகுறிப்பிட்டார்.

## பூட்டான் மன்னரை நேரில் அழைக்கவில்லை

(கொழும்பு)

கொழும்பில் நடைபெறவிருந்த 'சார்க்' மாநாட்டிற்கான ஏற்பாடுகளைக் கவனித்த இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் அங்கத்துவ நாடுகள் ஒவ்வொன்றுக்கும் விஜயம்செய்து அரசுத்தலைவர்களுக்கு நேரில் அழைப்பு விடுத்திருந்தார்.

ஆனால் பூட்டான் நாட்டிற்கு செல்லவில்லையெனவும் பூட்டான் மன்னர்வாங்சுக்கை நேரில் சந்தித்து அழைப்பு விடவில்லை என்றும் அதனால் தான் அவர் கொழும்புவர மறுத்திருந்தாரென்றும் ஏஜென்சிச் செய்திகள் கூறுகின்றன

## இந்தியப் பிரதமரின் கொழும்பு பயணம் ரத்து

(டில்லி)

கொழும்பில் நடைபெறவிருந்த ஆறாவது ''சார்க்'' மாநாடு ஒத்திவைக்கப்பட்டதையடுத்து இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் தமது கொழும்பு விஜயத்தை ரத்துச் செய்திருப்பதாக இந்திய வானொலி அறிவித்துள்ளது.

பூட்டான் மன்னரின் அங்கீகாரம் பெற்ற உயர் பிரதிநிதியொருவரின் ஒத்துழைப்போடு மாநாட்டைநடத்தலாமென்று

(4ஆம் பக்கம் பார்க்க)

## சார்க் வெளியுறவு அமைச்சர்கள் சாதாரண முறையில் கொழும்பில்பேச்சுவார்த்தை

(கொழும்பு)

நேபாள பிரதமரும், பூட்டான் மன்னரும் சார்க் உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை என்ற உத்தியோகபூர்வ அறிவிப்பைத் தொடர்ந்து கொழும்பில் 'சார்க்' நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் சாதாரண முறையில் ஆலோசனை நடத்தி வருகின்றனர் என்று கொழும்பிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(4ஆம் பக்கம் பார்க்க)

**இலவச இணைப்பு**

1982 தொடக்கம் மண்மீட்புக்காய் உயிர் நீத்த மாவீரர்களின் குறிப்பேடு இணைக்கப்பட்டுள்ளது.

## மாநாடு குழம்பியது குறித்து சிறிலங்கா கவலை

தென்னாசியப் பிராந்திய நாடுகளின் ஒத்துழைப்பு அமைப்பான 'சார்க்' அமைப்பின் அரசுத் தலைவர்கள் மட்டத்திலான ஆறாவது உச்சி மாநாட்டை நடத்துவதற்கான சூழ்நிலை தற்போது இல்லையென கவலையுடன் அறியத்தருவதாக இலங்கை அரசாங்கத்தின் வெளிநாட்டமைச்சு விடுத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று வெளியிடப்பட்ட இவ்வறிக்கையின் முக்கிய விடயங்கள் வருமாறு:

ஏழு சார்க் நாடுகளான பாகிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், நேபாளம், மாலை

(4ஆம் பக்கம் பார்க்க)

## நேபாள பிரதமர் கொழும்பு வரமாட்டார்

### நேபாளம் உத்தியோகபூர்வ அறிவிப்பு

நேபாள பிரதமர் கிரிஜா பிரசாத் கொயிராலா 'சார்க்' உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளமாட்டார் என்று உத்தியோகபூர்வமாக அறி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பிரேமாவை பதவி நீக்க அதிருப்தியாளர் இயக்கம்

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவை பதவியிலிருந்து அகற்றுவதற்காக அதிருப்தியாளர்கள் இயக்கம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பிரேமதாஸாவிற்கு உதவ தற்பொழுது நண்பர்களில்லை

### லலித்

(குளியாப்பிட்டி)

ஜனாதிபதி பிரேமதாசாவின் தலைமையின்கீழ் ஐக்கிய தேசியக்கட்சி இதயமில்லாத மனித நேயமற்ற ஒழுக்கமில்லாத கட்சியாக உருவெடுத்துள்ளது என்று பல்வலவில் ஐ.தே. கட்சி அதிருப்தியாளர் கூட்டத்தில் நுவரெலியா மாவட்ட உறுப்பினர் காமினி திஸாநாயக்கா தெரிவித்தார்.

குருநாகல் மாவட்டம் பல்லவில் நடந்த இக்கூட்டத்தில் இதுதான் அண்மையில் கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

(4 ஆம் பக்கம் பார்க்க).

கணித விஞ்ஞான
ஆசிரியர்களுக்கான
போட்டிப் பரீட்சை
பயிற்சி
வகுப்புகள்

ஆரம்பம் 15.11.91
(2 மணி)

விரிவுரையாளர்கள்:
அ. குமாரவேலு
க. குணராஜா

இதற்கான விண்ணப்ப படிவத்தினையும் விபரத்தினையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம்சந்தி, யாழ்.

(B/3436)

---

புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

[வெளிவாரிப்
பட்டப்படிப்புக்கள்]

★ யாழ். பல்கலைக்கழகத்திற்கான G. A. Q. 1st IN COM. விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.


★ பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கான விரிவுரைகள்

ஆரம்பம் 09.11.91
(11 மணி)

★ G. A. Q. பரீட்சைக்கு ஆங்கில இலக்கியத்தை பாடமாக கற்கும் மாணவர்க்கான விரிவுரைகள்

---

## ஓராண்டு நினைவஞ்சலி



வீரஜனனம்
08-06-1965

வீரமரணம்
19-10-1990

திதி 07-11-1991

பலாலி நேரடி மோதலில் வீரமரணமடைந்த
2ம் லெப். சதீஸ்
(வேலும்மயிலும் குணசீலன்)

தேனிசைத் தமிழுக்கோர் முடியுண்டென்று
தேடி அலைந்தொரு சமர் செய் புலிகளாயின்று
கூடி நின்றொரு ஈழமமைப்போமென்று
கூட்டத்தில் சேர்ந்திடு புலியுடை செங்கொடி
பிடிப்போமென்று

மலர்க தமிழாட்சி

நெடியகாடு,
வல்வெட்டித்துறை. (R/1909) குடும்பத்தினர்.

---

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாய் மடியில்
10 02 - 69

தாயக மடியில்
07 - 11 - 85

வீரவேங்கை
சத்தியன்
(பரமசாமி
கிருபாகரன்)

வன்னி மண்ணின்
வண்ண நிலவே
அன்னை மண் மீட்க
அரிய புலிப்படை சேர்ந்தாய்

---

## பதவி வெற்றிடங்கள்

(1) ஆண்டு 04, 05 வகுப்புகளுக்கான (விஞ்ஞானம், ஆங்கிலம்) ஆசிரியர்கள்.
(2) ஆண்டு 06 முதல் 11 வரை கணிதம், தமிழ், விஞ்ஞானம், சமூகக்கல்வி, ஆங்கிலம் கற்பிப்பதற்கான ஆசிரியர்கள்.
(3) பாலர் பாடசாலைக்கான ஆசிரியர்கள்.
(4) அலுவலக உதவியாளர்கள்.

மேற்படி பதவிகளுக்கு பொருத்தமான தகுதிகள், அனுபவங்கள் உடையவர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

விண்ணப்பங்களை சொந்தக் கையெழுத்தில் கல்வித் தராதர சான்றிதழ்களின் பிரதிகள், அனுபவத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும்.

இருபாலைக் (எக்ஸ்பிறஸ்)
கல்வி நிலையம்

இருபாலை சந்தி, கோப்பாய்.

(B/3443)

---

## மூன்றாவது ஆண்டஞ்சலி

உயர்திரு ச. அ. செபரத்தினம்

தோற்றம்: 17.07.1928
அழிப்பு: 07:11,1988

அன்றொரு திங்களிரவில், அநியாயக்காரரால்......
இன்றொடு மூன்றாண்டாய் இல்லத்திலோர்வெற்றிடம்
நாமென்ன செய்வோம் கண்ணீர் தான்சொரிவோம்
அது அந்த வெற்றிடத்தை நிரப்புமா என்ன!
அதைச் செய்த கயவரின் சின்னமிவிலொன்று
கதையற்று சலனமற்றுக் கிடக்கிறது
இறந்தவர் நாமாயின் வென்றவர் யாரோ?
ஒன்றுமட்டும் புதிரல்ல
அவனின்றி அணுவும் அசையாப்பாரினில்
வென்றவரும் இறப்பதுதான்
இதைக் காலங்கள் புரியவைக்கும்.

பத்திமா வாசா,
சண்டிலிப்பாய் வீதி,
பண்டத்தரிப்பு.

பிரிவால் துயருறும்
அன்பு மனைவி தயம்,
பிள்ளைகள் குமார், சின்னோய்
சத்தி, அமுதா, ஆனந்தி
உற்றார், உறவினர்கள்.

(R/1913)


---

## நினைவலைகளில்...

1 ஆம் வருட 45 ஆம் நாள்

---

## ஓராண்டுநினைவஞ்சலியும் ஆண்டுத் திவசமும்



வீரஜனனம்
6-2-1976

வீரமரணம்
19-10-1991

2- ம்
லெப்
சீனன்
(சற்குரு
சதீஸ்)

பலாலி இராணுவத்தினுடனான நேரடி மோதலில் வீரமரணம்.

வியாழக்கிழமை திதி 7-11-1991

மாயன் திருமகனாம் மன்மதனே வென்றனது
தாயவயிற்றுதித்த தோன்றலெனை நான் மகிழ்ந்தேன்
ஆயதொரு வீரன் அபிமன்யு வாழ்வெனவே
நேயமிகு போர்க்களத்தில் தியாகி நீயாயினையே

சதீஸ் வீதி
நீர்வேலி வடக்கு
நீர்வேலி (R/1910) பெற்றோர், சகோதரர்

---

## நினைவு கூருகின்றோம்...

1991 - 11 - 07

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டக்களப்பு இரும்பூமாமம் பகுதியில் சிறீலங்காப் படையினரின் முற்றுகையின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவு எய்திய

காண விரிவுரைகள்

ஆரம்பம் 09.11.91
(11 மணி)

★ G.A.Q. பரீட்சைக்கு ஆங்கில இலக்கியத்தை பாடமாக எடுக்கும் மாணவர்க்கான விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

நிர்வாகி:
S. அருள்நங்கை
(B/3436)

கம்பியூட்டர் கல்வி



★ DIPLOMA IN DATA PROCESSING AND

COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE

★ D BASE III +
★ LOTUS 1-2-3
★ WORD STAR

புதிய பிரிவுகள் ஆரம்பம்

09-11-91 (சனி, ஞாயிறு வகுப்புக்கள்)
11-10-91 (திங்கள், புதன் வெள்ளி வகுப்புக்கள்) மேலதிக விபரங்களுக்கு

Unikco Computer Centre
37, Clock Tower Road
Jaffna.
(B/3444)



சத்தியன்
(பரமசாமி
கிருபாகரன்)

வன்னி மண்ணின்
வண்ண நிலவே
அன்னை மண் மீட்க
அரிய புலிப்படை சேர்ந்தாய்
உரிமை போர் சோலை
உன் உயிரை
மண்ணிற்கே ஈந்தாய்
அதி காலை ஒன்றில் — நீ
அஸ்தமித்த வேளையில்
தூரத்தில் ஒரு விடிவெள்ளி
உன் பெயர் சுமந்து வரும்
எம் கண்ணீரை துடைத்து நிற்கும்

குமரபுரம்
கிளிநொச்சி.
(R/1906)
குடும்பத்தினர்

# ஈராண்டு நினைவஞ்சலி



பிறப்பு
15-10-1932
இறப்பு
30-10-1989

அம்பலவாணர்
இரத்தினசிங்கம்
(ஓய்வுபெற்றமருந்து கலவையாளர்)

திதி 7-11-1991

ஈராண்டு சென்றாலும்
ஒப்பில்லா எம் தெய்வமே
உன்னை நாம் மறப்போமா
மறந்து இருப்போமா
பொன்னான ஜெனியிலே
பொல்லாத நோய் வந்து
கந்தன் தினமாம்
கந்த சஷ்டி அன்று
அணைத்து விட்டது
ஆத்மா சாந்தி பெற
ஆறுமுகனை வேண்டுகிறோம்

'இரத்தினகிரி'
சிவன் வீதி
கோண்டாவில் வடக்கு
கோண்டாவில்.
(R/1907)

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, மக்கள்
மருமகன், பேரன்

சண்டிலிப்பாய் வீதி,
பண்டத்தரிப்பு,
(R/1913)

அன்பு மனைவி குடும்,
பிள்ளைகள் குமார், சின்னோய்
சத்தி, அமுதா, ஆனந்தி
உற்றார், உறவினர்கள்.

# நினைவலைகளில்...

| 1 ஆம் வருட நினைவலைகள் | 45 ஆம் நாள் நினைவலைகள் |
|---|---|





வீரவேங்கை
ராஜ்
(தங்கவேலாயுதம்ஜெயராஜ்)
பிறப்பு:- 1976-08-26
வீரச்சாவு:- 1990-08-25

அமைதிப் போர்வையோடு
அழிக்க வந்த அந்நியனின்
அடிவருடிக் கூட்டத்து
துப்பாக்கி வேட்டினிற்கு
தந்தை இரையானார்
தமிழீழ மண்காக்க
தனயர்கள் இருபேரும்
தியாக வேள்விதனில்
ஆகுதியாய்
தம்பியவன் மண்டைதீவில்

கப்டன்
வரதப்பா
(சந்தக்கண்ணன்)
(தங்கவேலாயுதம்விஜயராஜ்)
பிறப்பு:- 1972-12-15
வீரச்சாவு:- 1991-09-23

அண்ணனவன் மணலாற்றில்
மாவீரர்கள் வரிசையில் வீழ்ந்து
விட்டார்
மண்மாதா மடிமீதே!
வீழ்ந்தபின்னும் வாழ்கின்ற
வீரவித்துக்களே!
மாண்ட பின்னும் மக்கள்
மனங்களிடை
மங்காத ஒளிவீசும் மறவர்களே!
மறவர்களே!
நாளை பிறக்கும்
புதிய தமிழ் தேசமதில்
வீரகாவியமாய் நீங்கள்
திகழ்வீர்கள்

இவர்களுடன் வீரச்சாவு அடைந்த வீரவேங்கைகளுக்கு எமது நினைவலைகள்.

இணுவில் கிழக்கு
காரைக்கால் றோட்
கோண்டாவில்
குடும்பத்தினர்
(B/3437)

1991-11-07

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டக்களப்பு திருப்பெருந்துறை பகுதியில் சிறீலங்கா படையினரின் முற்றுகையின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவு எய்திய

நெல்சன் (சின்னத்துரை உதயகுமார் - சேனைக்குடியிருப்பு, மட்டக்களப்பு)

நிசாந்தன் (இராசேந்திரன் - பரந்தன், கிளிநொச்சி)

கிளிநொச்சி, கோணாவில் பகுதியில் எதிர்பாராத விதமாகக் கைக்குண்டு வெடித்ததில் சாவைத் தழுவிய

அபிஸ் (பரமலிங்கம் தவநேசன் - முத்தையன் கட்டு முல்லைத்தீவு)

கிளிநொச்சி, உமையாள்புரம் பகுதியில் சிறீலங்காப் படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவு எய்திய

சத்தியன் (பரமசாமி கிருபாகரன் - குமரபுரம், கிளிநொச்சி)

1987 ஆம் ஆண்டு உரும்பராய்ப் பகுதியில் இந்தியப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட 7 தமிழர்கள்

1988 ஆம் ஆண்டு திருக்கோணமலை / மூதூர் 55 ஆம் கட்டைப் பகுதியில் இந்தியப் படையினரின் முன்னிலையில் தேசவிரோதிகளினால் வெட்டிக்கொல்லப்பட்ட எமது உதவியாளர்

ரகு

1989 ஆம் ஆண்டு கிளிநொச்சிக் காட்டில் சிறீலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவு எய்திய

கப்டன் சத்தியறாஜ் (பா. இறிஸ்ரி - உயிலங்குளம், மன்னார்)

ஆழ்வார் (நா. கனகசுந்தரம்)

1990 ஆம் ஆண்டு மாவிட்டபுரம் பகுதியில் சிறீலங்காப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரமரணமெய்திய

மது (வடிவேல் ஆனந்தன் - வேம்பிராய்ச்சந்தி, மீசாலை வடக்கு)

தமிழீழக் கடற்பரப்பில் (குறிகாட்டுவான்) தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது சிறீலங்காக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்க் கடற்றொழிலாளர்கள்.

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி
(B/3441)

✻ சிந்தனைக்கு ✻

செயல் மறக்கப்படலாம்; ஆனால்
அதன் விளைவு தொடர்கிறது

— [illegible]

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 07-11-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 023 - 2639 நிர்வாகபீடம்: [illegible]
[illegible]

# அயலவர்கள் பழி தீர்த்தனரா?

கொழும்பில் நடைபெறுவதாக இருந்த 'சார்க்' உச்சி மாநாடு இறுதி நேரத்தில் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. பூட்டான் மன்னர் மாநாட்டிற்கு வரமுடியாது என அறிவித்ததைத் தொடர்ந்து எழுந்த நெருக்கடியைத் தொடர்ந்து இம்மாநாடு ஒத்திவைக்கும் நிலையை அடைந்தது. அதேவேளை பூட்டான் மன்னர் வராவிடினும் மாநாட்டை திட்டமிட்டபடி நடாத்தி முடிக்க சிறிலங்கா வைத்த கோரிக்கையை இந்தியா நிராகரித்து விட்டது. பூரணமாக ஏற்பாடுகள் யாவும் முடிந்த நிலையில் இந்த உச்சி மாநாடு நடைபெறாமை சிறிலங்காவைப் பொறுத்தும் ஜனாதிபதி பிரேமதாசாவைப் பொறுத்தும் பெருந்தலை குனிவாகும்.

'சார்க்' அமைப்பின் கொள்கை விரகடனத்தில் அங்கத்துவ நாடுகளின் ஏழு தலைவர்களும் ஏகமனதாக அங்கீகரித்தால் மட்டுமே எந்தவொரு தீர்மானமும் நிறைவேற்றப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது இவ் விதியினாலேயே சர்ச்சை உருவாகியுள்ளது. உள்நாட்டு அரசியல் நெருக்கடி காரணமாக பூட்டான் மன்னர் வாங்சுக் உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள கொழும்பு வரமுடியாது என அறிவித்ததைத் தொடர்ந்தே இந்நெருக்கடி நிலை தோன்றியது.

ஆனால் இந்நெருக்கடி நிலை தோன்ற பூட்டான் மன்னர் வாங்சுக்கின் அறிவிப்பே காரணமென வெளியில் தெரிவிக்கப்படினும் திட்டவட்டமாக தனியாக அவரது அறிவிப்பு மட்டும் காரணமாக இருக்க முடியாது. அத்தோடு பூட்டான் மன்னர் தெரிவிப்பதுபோல் பூட்டானில் எதுவித பெரிய அரசியல் நெருக்கடியும் இருப்பதாகத் தெரியவில்லை. இதேவேளை இம் மாநாடு குழப்பம் அடைவதற்குப் பல சக்திகள் பின்னணியில் இருந்துள்ளதாக ஊகிக்க கூடியதாக உள்ளது. மாநாடு நடத்தப்பட வேண்டும் என்பதைவிட தங்க[illegible]

## விழுதுகள்

# மேஜர் கணேஷ்



மூதூர் பிராந்தியம் என்று குறிப்பிடும் போது கணேஷ் என்று கூறிவிட்டுத் தான் - அவனது சாதனைகள்- அவனது இயக்கங்கள் பற்றிக் கூறிவிட்டுத்தான் அடுத்த விஷயத்துக்குச் செல்வார்கள் திருமலை மக்கள் - அந்தளவிற்கு திருமலையின் வரலாற்றில் தனியிடம் பெற்றவன் கணேஷ்.

சைக்கிளில் - 303 ரக துப்பாக்கியுடன் பொலிசார் வந்து கைது செய்து கொண்டு செல்லும் நிலைமையில் இருந்த மூதூருக்குள் முகாமிலிருந்து புறப்பட்டால் உயிருக்கு உத்தரவாதமில்லை என சிறிலங்காவின் முப்படையினரும் கருதும் - கலங்கும் நிலையை உருவாக்கியவன் அவன். அதே போல் "இது எங்கள் பிராந்தியம்- நாமே இங்கு செல்வாக்குமிக்கவர்கள் - இங்கு மற்றவர்களுக்கு அனுமதியில்லை" என வேலி போட முனைந்தவர்களுக்கு தமிழீழத்தின் எந்தப்பகுதியிலும் எம்மால் தாக்குதல் நடத்த முடியும்- தாக்குதல் என்றால் இப்படித்தான் செய்வது- எமது மக்களுக்கு துன்பம் நேரும்போது எமது ஆயுதத்தின் வலிமையை இப்படித்தான் பயன்படுத்துவது என்பன மற்றையெல்லாம் தனது செயற்பாடுகளால் விளக்கியவன் கணேஷ். வேகம்- துணிச்சல் இவை இரண்டும் மட்டும் இருந்தால் போதும் அதுவே சாதனைகளுக்கு அத்திவாரமாகும்- எமது மக்களுக்கும் கவசமாகும் என்று படிப்பித்தான்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தாக்குதல் பிரிவுத் தலைவனாக இருந்த சிலனின் நெருங்கிய நண்பன் இவன். அவன்மூலமாகவே போராட்டத்தில் இணைந்து கொண்டவன்.

திருமலை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெற்றுக் கொண்டிருந்த சிங்களக் குடியேற்றத்தை அதன் ஆபத்தை கூர்மையாக அனுப[illegible]

வேஷியான சிறில் மத்தியூவின் தலைமையில் "சேருவல புனிதப் பிரதேசம்" என்ற பெயரில் சிங்களக் குடியேற்றங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. தானாக முளைத்த அரசமரங்களைச் சூழவுள்ள இடங்களையெல்லாம் மதத்தின் பெயரால் சிங்களக் குடியேற்ற கிராமங்களாக்குவதே இவரது கடமையாக இருந்தது. இதற்கென அரசின் சகல வளங்களும் பயன்படுத்தப்பட்டன. கணேஷ் இப்பிராந்தியத்தினுள் காலடி எடுத்துவைக்கும் வரை தான் இந்தநிலை. அதன்பின் தாங்கள் பிறந்து வளர்ந்த இடம் தான் தங்கள் சொந்த இடம்- இயல்பான குடும்ப வாழ்வை மேற்கொள்ள விரும்புவோர் திருமலைக்கு குடியேற விரும்புவது சாத்தியமில்லை என்ற முடிவுக்கு சிங்கள மக்கள் வந்தனர். அந்தளவுக்கு சிங்களக் குடியேற்றங்கள் மீதான தாக்குதல்கள் அமைந்தன.

குறிப்பாக 1985 ஆம் ஆண்டு ஓர் நாள் நிகழ்ந்த சம்பவத்தைக் குறிப்பிடலாம். மேன்காமத்துக்கு அதனைச் சூழவுள்ள பகுதிகளுக்கும் சிங்களக் காவல் படையினர் வந்தனர். அகப்பட்டதை எல்லாம் கொள்ளையடித்தனர். அத்துடன் அக்கிராமத்தில் தப்பியோடியவர்கள் போக எஞ்சியிருந்த - பெண்களை தெரிவுசெய்து சந்திக்காலைக்கு கடத்திக்கொண்டு சென்றனர். இனவாதம், இருபத்து தனம் என்பன கண்ணை மறைத்த நிலையில் தாங்களும் பெண்கள் தானே - தமக்கு இப்படி ஒரு நிலை வந்தால் எப்படி இருக்கும் என்பதையெல்லாம் சிந்திக்க நேரமில்லாத குடியேற்ற வாசிகளான சிங்களப் [illegible]

டிருந்தனர். இச்செய்தி கணேசிற்குத் தெரிந்தது. கணேஷ் சற்றும் தாமதிக்கவில்லை. ஏற்கனவே இந்த விசயத்தைக் கேள்வியுற்றுக் கலங்கிக் கொண்டிருந்த அமைப்புக்களிடம் ஆலோசனை நடத்தவில்லை அவன் நேரடியாக களத்தில் இறங்கினான். இது தான் புலிகளுக்கும் ஏனையவர்களுக்கும் வித்தியாசம் என்பதை தமிழீழ வரலாறு அன்று தெட்டத்தெளிவாகக் காட்டியது.

கணேஷின் தோழர்களின் துப்பாக்கியிலிருந்து சீறித்து[illegible]

டன் சென்ற ரவைகள் எமது பெண்களை விடுவித்தன பலியானோர் போக எஞ்சிய காவல் படையினர் தலைதெறிக்க ஓடினர். இச்சமயத்தில் பெண்களிடம் தனியாக அகப்பட்ட ஒரு காவல் படை வீரன் எமது பெண்களின் சினம் எத்தகையது என்பதை தெரிந்து கொண்டான். ஆனால் அதை மற்றவர்களிடம் எடுத்துச் சொல்வதற்கு அவன் உயிருடன் இருக்கவில்லை. அன்று ஒரு புதிய நிலைமை உருவாகியது போராட்டத்தில் ஆண்கள் மட்டும் ஆயுதம் ஏந்தினால் மட்டும் போதாது பெண்களும் ஆயுதம் ஏந்த வேண்டும் என்பதே அது.

இன்றும் மூதூர்ப் பகுதியி[illegible]

வேண்டும் என்ற உணர்வுடன் மக்கள் இருக்கின்றார்கள் என்றால் அது இது போன்ற சம்பவங்களினால் தான். புலிகளும் மக்களும் ஒருவரே என்ற இந்த நிலையை உருவாக்கியவன் கணேஷ் என்றால் மிகையாகாது.

மூதூர்ப்பிராந்தியத்தின் பெயரால் கணேஷின் பெயர் உச்சரிக்கப்பட்டாலும், எல்லாப் பிராந்தியங்களின் மண்ணிலும் இவனது காலடி பதிந்துள்ளது தமிழீழத்தின் சகல பிராந்தியங்களிலும் நடைபெற்ற தாக்குதலில் இவன் பங்குபற்றியிருக்கிறான். வன்னிப்பிராந்தியத்தில் நடைபெற்ற உமையாள்புரம் தாக்குதல், திருநெல்வேலியில் நடைபெற்ற 13 இராணுவ வீரர்கள் மீதான தாக்குதல், மன்னார் பிராந்தியத்தில் முதன் முதல் நடைபெற்ற 3 ஆம் பிட்டி கண்ணிவெடித் தாக்குதல், மட்டக்களப்பு பிராந்தியத்தில் நடைபெற்ற களுவாஞ்சிக்குடித் தாக்குதல், அம்பாறை மாவட்டம் திருக்கோயிலில் நடைபெற்ற இனத்துரோகி ஒருவன் மீதான தாக்குதல், மூதூருக்குப் போகும் வரை வடமராட்சியில் நடைபெற்ற பல தாக்குதல்கள் என நெடிய பட்டியலே உண்டு

.303 ரக துப்பாக்கியால் விமானத்தைச் சுட்டு வீழ்த்த முடியும் என்ற செய்தியை உலகின் இராணுவ ஆய்வாளர்களுக்குத் தெரியப்படுத்தியவனும் இவனே. இவ்வாறு 303 ரகதுப்பாக்கியால் சுட்டு வீழ்த்தப்பட்ட உலங்குவானூர்தியின் பாகங்களை கூலித்தீவிலிருந்து தமிழகத்துக்கு எடுத்துச் சென்று காண்பித்தார் அங்கிருந்து வந்த திரு. நெடுமாறன் அவர்கள்.

இதேபோல் ஒருசமயம் மல்லிகைத் தீவுச்சந்தியில் இராணுவத்தினரின் வருகையை எதிர்பார்த்து கண்ணிவெடியைப் புதைத்து விட்டுக்காத்திருந்தான் கணேஷ். கணேஷ் புதைத்து வைத்த கண்ணிவெடிமீது அவர்களின் உலங்குவானூர்தி தரையிறங்கியது கணேஷ் விசையை அழுத்தினான். துரதிர்ஷ்டவசமாக அது வெடிக்கவில்லை வெடித்திருந்தால் உலங்கு விமான[illegible]

தொடர்ந்தே இந்நெருக்கடி நிலை தோன்றியது.

ஆனால் இந்நெருக்கடி நிலை தோன்ற பூட்டான் மன்னர் வாங்சுக்கின் அறிவிப்பே காரணமென வெளியில் தெரிவிக்கப்படினும் திட்டவட்டமாக தனியாக அவரது அறிவிப்பு மட்டும் காரணமாக இருக்க முடியாது. அத்தோடு பூட்டான் மன்னர் தெரிவிப்பதுபோல் பூட்டானில் எதுவித பெரிய அரசியல் நெருக்கடியும் இருப்பதாகத் தெரியவில்லை. இதேவேளை இம் மாநாடு குழப்பம் அடைவதற்குப் பல சக்திகள் பின்னணியில் இருந்துள்ளதாக ஊகிக்க கூடியதாக உள்ளது. மாநாடு நடத்தப்பட வேண்டும் என்பதைவிட தட்டிக் கழிப்பதிலேயே இந்தியா போன்ற நாடுகள் அக்கறையாக உள்ளதில் இருந்து இதனைப் புரிந்து கொள்ளலாம்.

உள்நாட்டில் தொடர்ச்சியான நெருக்கடிக்கு முகம் கொடுத்து அதிலிருந்து சற்று மீண்டு தன்னை நிலை நிறுத்திக்கொள்ள இலங்கை ஜனாதிபதி எடுத்த முயற்சிக்கு ஏற்பட்ட பெருந் தோல்வி என்றே இதைச் சொல்ல வேண்டும். இது இலங்கை அரசாங்கத்திற்கு அண்மையில் ஏற்பட்ட பெரிய இராஜதந்திரத் தோல்வியும் கூட.

திரு. பிரேமதாசாவிற்கு இத்தோல்வி ஏற்பட்டமைக்கு 'சார்க்' விவகாரம் தொடர்பாக கடந்த காலத்தில் அவர் நடந்துகொண்ட முறை காரணமா? அல்லது அண்டை நாடுகளுடன் கடைப்பிடித்த வெளியுறவுக் கொள்கையும், நடவடிக்கைகளும் காரணமா? எனத் திட்டவட்டமாகத் தெரிவிக்க முடியாது விட்டாலும் இந்த இரண்டு காரணிகளும் இணைந்து செயற்பட்டதாகவே எண்ண வைக்கின்றது.

'சார்க்' உச்சி மாநாட்டில் முதன்முறையாக உயர் தலைவருக்குப் பதில், அடுத்த மட்டத்திலுள்ள தலைவரை அனுப்பி இச் சம்பிரதாயத்தைத் தொடக்கி வைத்த நாடு இலங்கையே. அதுவும் திரு பிரேமதாசா ஆட்சியிலேயே நடைபெற்றது. கடந்த வருடம் மாலேயில் நடைபெற்ற உச்சி மாநாட்டிற்கு இலங்கை ஜனாதிபதிக்கு பதில் பிரதம மந்திரி டி. பி. விஜேதுங்கா சென்றிருந்தார். அதற்கான விளைவுகளை தற்பொழுது வருத்தத்துடன் இலங்கை அனுபவிக்க வேண்டி வந்துள்ளது.

இதனை இலங்கை வெளியுறவுக் கொள்கைக்கு கிடைத்த மாபெரும் அடியாகவும் சொல்லலாம். ஜனாதிபதியாக திரு பிரேமதாசா பதவி ஏற்றதும் இலங்கை வெளியுறவுக்கொள்கை மீளாய்வு செய்யப்பட்டு திருத்தி அமைக்கப்பட்டது. இதன் பிரகாரம் தென்னாசிய நாடுகளுடன் நட்புச் சூழலைப் பேணுவது என்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால் தற்பொழுது சார்க் மாநாடு தொடர்பாக ஏற்பட்டுள்ள குழப்பம் இலங்கை வெளியுறவுக்கொள்கை தோல்வியில் முடிவடைந்துள்ளமையை வெளிப்படுத்தி நிற்கின்றது; அத்தோடு திரு. பிரேமதாசாவிற்கு பெருத்த அவமானத்தை ஏற்படுத்தியுள்ளது.

'சார்க் மாநாட்டின் மூலம் பிராந்திய ரீதியாக ஏற்பட்ட அவமானம் / தோல்வி திரு. பிரேமதாசாவின் உள்நாட்டு அரசியல் செல்வாக்கையும் குறிப்பிடத்தக்க அளவில் பாதிக்கும் என்பதில் சந்தேகமில்லை. இதனால் இலங்கை ஜனாதிபதிக்கு புதிய சிரமங்கள் உருவாகும் என்பதையும் மறுக்க முடியாது. அதேவேளை 'சார்க்' இன் எதிர்காலமும் கேள்விக்கு உரியதாகி விட்டது.

---

தலைவனாக இருந்த சின்னின் நெருங்கிய நண்பன் இவன். அவன்மூலமாகவே போராட்டத்தில் இணைந்து கொண்டவன்.

திருமலை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெற்றுக் கொண்டிருந்த சிங்களக் குடியேற்றத்தை அதன் ஆபத்தை கூடுதலாக அனுபவித்த பிராந்தியம் மூதூராகும். இலங்கை அமைச்சரவையிலேயே மிகவும் இனத்து

நெருப்பதை சவக்காலைக்கு கடத்திக்கொண்டு சென்றனர். இனவாதம், திருட்டுத் தனம் என்பன கண்ணை மறைத்த நிலையில் தாங்களும் பெண்கள் தானே - தமக்கு இப்படி ஒரு நிலை வந்தால் எப்படி இருக்கும் என்பதையெல்லாம் சிந்திக்க நேரமில்லாத குடியேற்ற வாசிகளான சிங்களப் பெண்கள் ஆக்கிரமித்திருந்த ஓடுகள், கதவுகள் என்பனவற்றை கழற்றிக் கொண்

டம் எடுத்துச் சொல்வதற்கு அவன் உயிருடன் இருக்கவில்லை. அன்று ஒரு புதிய நிலைமை உருவாகியது. போராட்டத்தில் ஆண்கள் மட்டும் ஆயுதம் ஏந்தினால் மட்டும் போதாது பெண்களும் ஆயுதம் ஏந்த வேண்டும் என்பதே அது.

இன்றும் மூதூரின் பகுதிகளிலும் தமது மண்ணை விட்டுப் பிரியாமல் எதனையும் தாங்கிக்கொண்டு போராட

வருகையை எதிர்பார்த்து கண்ணி வெடியைப் புதைத்து விட்டுக் காத்திருந்தான் கணேஷ். கணேஷ் புதைத்து வைத்த கண்ணி வெடியில் அவர்களின் உலங்கு வானூர்தி தரையிறங்கியது. கணேஷ் விசையை அழுத்தினான். துரதிர்ஷ்டவசமாக அது வெடிக்கவில்லை. வெடித்திருந்தால் உலகில் விமானத்துக்கு கண்ணிவெடி வைத்தவர்கள் புலிகளே என்ற வரலாறு படைக்கப்பட்டிருக்கும்.

---

## மருத்துவ புள்ளி விபரம்; செயற்பாடு பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவமனையின் மருத்துவப் புள்ளிவிபரப் பதிவும் பகுதியின் செயற்பாடு பாதிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கை இராணுவத்தினரின் தாக்குதல்களால் கடந்த ஆண்டு மேற்படி மருத்துவமனை கணிசமான காலப் பகுதியில் இடம் பெயர்ந்து இயங்கி வந்தது. இடம்பெயர்ந்து இயங்கிவந்த காலப் பகுதியில் மருத்துவ புள்ளி விபரங்களைப் பேணுவதற்கு இவ்வைத்திய சாலையின் மருத்துவ புள்ளி விபரப் பகுதியினர் தவறிவிட்டனர். இதனால் மேற்படி குறிப்பிட்ட காலப் பகுதியில் எந்த மருத்துவ பதிவுகளும் இவ்வைத்தியசாலையின் வசம் இல்லை. நீண்டகாலமாகப் பேணப்பட்டுவந்த மருத்துவ புள்ளிவிபரப்பதிவுகளில் குறிப்பிட்டகால பதிவுகள் எதுவும் அற்ற இடைவெளி ஒன்று உருவாக்கப்பட்டமையால் எதிர்கால மருத்துவ திட்டமிடல்களிலும் மருத்துவபுள்ளிவிபர அறிக்கைகளிலும் அண்ணளவாக்கம் செய்ய வேண்டிய அவசியம் உருவாகியுள்ளது. வடபகுதியின் மருத்துவத் திட்டமிடல்கள் மேற்படி வைத்தியசாலையின் புள்ளிவிபரங்களை அடிப்படையாக வைத்தே மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (க)

## சோவியத்யூனியனுக்கு உ. வங்கி 30 கோடி டொலர் உதவி

(மொஸ்கோ)

உலகவங்கி சோவியத் யூனியனுக்கு சுமார் 30 மில்லியன் டொலர் பெறுமதியான தொழில் நுட்பஉதவிகளை வழங்க இருக்கின்றது. சோவியத் ஜனாதிபதி கொர்பசேவ் அவர்களும். உலகவங்கித் தலைவர் றூபேர்ட் பெஸ்ரன் அவர்களும் இதற்கான உடன்படிக்கை ஒன்றில் நேற்று முன்தினம் மொஸ்கோவில் கையெழுத்திட்டனர்.

உதவிகேட்டு தாமாக விண்ணப்பிக்கும் சோவியத் குடியரசுகளுக்கும் மட்டுமே இந்த உதவி வழங்கப்படும் என்று உலக வங்கி அறிவித்திருக்கின்றது.

## உரவிநியோகம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் சகல கமநல சேவை நிலையங்களிலும் உர விநியோகம் ஆரம்பமாகியுள்ளது என்று யாழ். அரசாங்க அதிபர் தெரிவித்தார். விவசாயிகள் தத்தமது பகுதி கமநலசேவை நிலையங்களில் உரத்தை பெற்றுக் கொள்ளலாம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (தி)

## கம்.கட்சி தலைவர் கொலை; அரசியல் கட்சிகள் கண்டனம்

(டில்லி)

பஞ்சாபின்மூத்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சர்வன் சிங் சீமாவையும் அவரது ஐந்து மெய்ப்பாதுகாப்பாளர்களையும் தீவிரவாதிகள் சுட்டுக்கொன்றதை பல அரசியல் கட்சிகள் கண்டனம் செய்துள்ளன.

கட்சியின் பொலிட்பியூரோ டில்லியில் வெளியிட்ட அறிக்கையில் தேசவிரோத சக்திகள் கட்சியைத் தமது பிரதான அரசியல் இலக்காக வைத்துக் கொண்டிருந்த போதிலும், மத்திய அரசு பஞ்சாப் பிரச்சினையில் தனது மாறுபடும் கொள்கை காரணமாக தனது பொறுப்புக்களைத் தட்டிக்கழிக்க முடியாது என்று கூறியிருக்கிறது.

## பாக். நிலை குறித்து இந்தியா ஆட்சேபம்

(டில்லி)

இந்தியாவின் சிறுபான்மையினரின் பாதுகாப்பு மற்றும் வணக்க ஸ்தலங்கள் குறித்து பாகிஸ்தான் தெரிவித்த கருத்தை இந்தியா வன்மையாக ஆட்சேபித்துள்ளது.

இந்தியாவிற்கான பாகிஸ்தான் பிரதி உயர்ஸ்தானிகர் வெளிவுறவு அலுவலகத்திற்கு நேற்று முன்தினம் அழைக்கப்பட்டு இந்தியாவின் உள்விவகாரங்களில் பாகிஸ்தான் தலையிட முயற்சிப்பது குறித்து இந்தியா தன் ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானின் மேற்படி செயல் சிம்லா ஒப்பந்தத்திற்கு முரணானது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது;

## தேயிலை வர்த்தகத்தில் வீழ்ச்சிப் போக்கு

(கொழும்பு)

சிறிலங்காவிடமிருந்து தேயிலை வாங்குவதைச் சிரியாவும் நிறுத்திக்கொண்டுள்ளது.

1990 ஆண்டின் வளைகுடா யுத்தத்திலிருந்து சிறிலங்கா தேயிலைஏற்றுமதிவியாபாரத்தில் வீழ்ச்சியை எதிர்நோக்கி வருகிறது.

பெருமளவு தேயிலை இறக்குமதி செய்த நாடான ஈராக் தேயிலைகொள்வனவை நிறுத்திக் கொண்டதுடன் பொருளாதாரநெருக்கடி நிலை காரணமாக ரஷ்யாவும் தேயிலை கொள்வனவை நிறுத்திக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

# கோலன் குன்றில் இஸ். குடியேற்றம் அமெரிக்கா பலத்த கண்டனம்

(வாஷிங்டன்)
கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசமான கோலான் மலைக்குன்றுப் பகுதிகளில் கடந்த ஞாயிறன்று புதிய யூதக்குடியேற்றத் திட்டங்களை ஆரம்பித்த இஸ்ரேலின் செயலை அமெரிக்கா கண்டித்துள்ளது.

நேட்டோ நாடுகளின் மாநாடு ஒன்றிற்காக ரோம் நகருக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் புறப்படுவதற்கு முன்பாக நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமெரிக்காவின் இக்கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

இச் செய்தியாளர் மாநாட்டில் மேலும் பேசிய அமெரிக்க வெளியுறவு செயலாளரும் செயல்களில் ஈடுபட ஜேம்ஸ்பேக்கர் ஆத்திரமூட்ட வேண்டாம் என்று சம்பந்தப்பட்ட சகல தரப்பினருக்கும் எச்சரிக்கை விடுத்ததோடு அடுத்த இரு வாரங்களில் மட்றிட் சமாதான மாநாட்டின் தொடர்ச்சியான அடுத்த சந்திப்பை மேற்கொள்வதற்கான இடம் பற்றி அரபுக்களும் யூதர்களும் இணக்கம் காண வேண்டுமெனவும், அவ்வாறில்லாவிடில் அமெரிக்கா தெரிவு செய்யுமிடத்தில் மாநாடு நடத்த வேண்டி வரும் எனவும் குறிப்பிட்டார்.

## மாவீரர்நாள் வேலைதிட்டம் பற்றிய கலந்துரையாடல்

மாவீரர் நாள் தொடர்பான ஏற்பாட்டு வேலைத்திட்டங்கள் பற்றிய சிற்றூரவைகள், இணக்கமன்றுகள், உற்பத்திக் குழுக்கள், கலைபண்பாட்டு அவைகள், பிரசாரக் குழுக்கள், மகளிர் சார்பான அமைப்புக்கள் மற்றும் பொது அமைப்புக்களுக்கான கலந்துரையாடல் நிகழ்வொன்று வடமராட்சிப் பிரிவினைச் சேர்ந்தவர்களுக்கு வட்ட அவைப் பிரதேச ரீதியாக இன்று 7-11-91 வியாழக்கிழமை பின்வரும் அட்டவணைப்படி நடைபெறவுள்ளது.

★ காலை 10.00 மணிக்கு பருத்தித்துறை வட்டவைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கு-புலோலி திரையரங்கில் நடைபெறும்.

★ பி.ப. 2.00 மணிக்கு கரவெட்டி வட்டவைப் பிரிவினருக்கு நெல்லியடி மத்தியமா வித்தியாலயத்தில் நடைபெறும்.

★ பி.ப. 4.00மணிக்கு வடமராட்சிகிழக்குப்பகுதியினை சேர்ந்தவர்களுக்கு நாகர்கோவில் பாடசாலையில் நடைபெறும்:

இந்நிகழ்வில் சகல அமைப்புக்களையும் சேர்ந்தவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மக்களுறவு கொள்கை முன்னெடுப்புப் பிரிவினர் கேட்டுக்கொள்கின்றனர்.

### கடற்புலிகள் அனுசரணையுடன்

## மாவீரர் ஞாபகார்த்த உதை பந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)
மாவீரர்களின் ஞாபகார்த்த மாபெரும், உதைபந்தாட்டப் போட்டி நேற்று முதல் ஆரம்பமானது,

கடற்புலிகளின் அனுசரணையுடன் ஒருங்கிணைக்கப்பட்ட விளையாட்டுக் குழுவினால் நடாத்தப்படும் மேற்படி உதைபந்தாட்டப் போட்டி வீதினமும் மாலை 3 மணிக்கு இரண்டு அணிகள் மோதுகின்றன. மேற்படி போட்டி யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## அரசாங்க அறிவித்தல்

தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை தற்காலிகமாக இயங்க முடியாமல் இருப்பதால் பொதுமக்களின் நன்மைகருதி 09-11-91 ந் திகதி தொடக்கம் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் பின்வரும் சிகிச்சைகள் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை அறியத்தருகின்றேன்

| சிகிச்சை | நடைபெறும் நாள் |
| --- | --- |
| குழந்தைகள் சிகிச்சை | ஒவ்வொருசெவ்வாய்க்கிழமையும் |
| வாதம் மற்றும்பொது சிகிச்சை | ஒவ்வொரு வியாழக்கிழமையும் |
| சலரோக சிகிச்சை | ஒவ்வொரு சனிக்கிழமையும் |

இத்துடன் திங்கள், புதன், வெள்ளி ஆகிய

### எறிகணைத் தாக்கு

ஆனைவிழுந்தான் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்றுக் காலை மக்கள் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டனர்.

சாதாரண

இவர்கள் சம்பிரதாயமான முறையில் முறைப்படி சந்திக்காது சாதாரண முறையில் சந்தித்து இது குறித்து ஆராய்ந்தார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இச்சந்திப்பின்போது சார்க் பிராந்திய நிதியம் ஒன்றினை உருவாக்குதல், ஐரோப்பிய பொருளாதார சமூகம், ஆசியான் போன்ற வெளி அமைப்புகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளுதல் பற்றியும் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரேமாவை

கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

பிரேமதாசா தனது அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி வருகின்றார் என்றும், அவரை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்றும் இந்த அதிருப்தியாளர்கள் கேட்டுக் கொண்டனர்.

அத்துடன் சிறிலங்காவில் பாராளுமன்ற ஆட்சிமுறையை மீண்டும் ஏற்படுத்த இந்த இயக்கம் போராடும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

எறிகணை

ஆதேவேளை பூநகரிப் பகுதியில் சிறிலங்கா கடற்படைப் பீரங்கிப் படகு ஒன்று பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டது. இதனால் பொதுமக்களின் சொத்துக்கள் பல சேதமடைந்துள்ளன.

மாநாடு

தீவு, இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளின் அரசுத் தலைவர்கள் நவம்பர் ஏழாம் திகதி முதல் ஒன்பதாம் திகதி வரை கொழும்பில் கூடி உச்சி மாநாட்டை நடத்த திட்டமிட்டிருந்தனர். மாநாட்டிற்குத் தேவையான சகல ஏற்பாடுகளையும் இலங்கை அரசாங்கம் பூர்த்தி செய்திருந்தது

சார்க்

தார். இதனை 'சார்க்' அமைத்துள்ள நாடுகளின் தலைவர்களுக்கு அவர் தெரிவித்துள்ளார்.

திட்டமிட்டபடி சகல ஏற்

ஜனாதிபதி

தாகவும் குப்பரவற்றிருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர். இது தொடர்பாகநடவடிக்கை எடுக்குமாறும்கோரியுள்ளனர்.

பிரேமதாசாவிற்கு

றே கணேகிஜே வீர, கீர்த்தி விஜேபாகு, அமநாயக்க என்பவர்கள் இப்போது உயிருடன் இல்லை. ஆனால் பிரபாகரனும், மாத்தையாவும் இருக்கிறார்கள். இவர்கள் இருவரும் தான் திரு. பிரேமதாசாவின் இப்போதைய புதிய நண்பர்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பு மாவட்ட உறுப்பினர் லலித் அத்துலத்முதலி பேசுகையில், பிரேமதாஸாவை தாக்குப் பிடிப்பதற்கு தற்சமயம் ஐ.தே. கட்சியினர் இல்லை, கண்டிக் கூட்டத்தில் ஜனாதிபதியை ஆதரித்துப் பேசிய ஒரேஒருவரின் அமைச்சர் தொண்டமானாவார். அவர் கட்சிக்காரர் அல்லர். மற்றவர் தயான் ஜெயதிலக்கா. அவர் ஐக்கிய சோசலிச முன்னணி (யு.எஸ்.ஏ) தேசிய பட்டியலில் பாராளுமன்றப் பிரவேசம் செய்தவர். மக்களின் வாழ்க்கைத் தரத்தில் உயர்வு இல்லை என்று அண்மையில் மத்திய வங்கி அறிக்கை தெரிவித்துள்ளார். இவ்வகையான நிதி ஆலோசகர்கள் தான் ஜனாதிபதிக்குக் கிடைத்துள்ளார்கள் என்றார் அவர்.

தனது பேச்சினால் ஜனாதிபதி மனம் வருந்தும் ஒரு நேரம் வேதத்தை உண்டாக்கலாம். ஆனால் உண்மையில் எல்லாம் வெறுமையாக உள்ளது என்று லலித் அத்துலத் முதலி மேலும் தெரிவித்தார்.

அரசுத்

உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறும் கலை சார நிகழ்ச்சிகளிலும் இவர்கள் கலந்து கொள்வர்.

இவ் அரசுத்தலைவர்கள் தனித்தனியே ஜனாதிபதி பிரேமதாசாவை சந்தித்து இருதரப்பு விவகாரங்கள் தொடர்பாகவும்கலந்துரையாடவுள்ளனர்.

உயிரினும்

மாகவும் அந்நாளில் மக்கள் ஆண்களும் பெண்களுமாக தாம் வாழும் கிராமத்திலோ நகரத்திலோ கூட்டாகச் சேர்ந்து பல்வேறுபட்ட சமூகப் பணிகளைச் செய்யலாம். இரத்ததானம் செய்தல், வைத்தியசாலை போன்ற பொது நிறுவனங்களில் துப்புரவு வேலைகள் செய்தல், சுகாதாரப் பணிகளைமேற்கொள்ளல், ஏழைகளுக்கும் அகதிகளாக்கப்பட்டவர்களுக்கும் முடிந்தவரை உணவு, பொருள் உதவிகளைச் செய்தல் போன்ற பல பணிகளைப் பொதுமக்கள்தாமாகவே மேற்கொள்ள முடியுமெனக்கூறப்பட்டுள்ளது

முன்னோடிப்

ருபாவைப் பெறமுடியாததால் பரீட்சையை நடாத்த முடியவில்லை என்று கொத்தணி அதிபர் சி. சரவணபவான் தெரிவித்தார்.

மேலும் வண். தெற்கு கொத்தணியில் நாவலர் வித்தியாலயம், நாவாந்துறை றோ.க. சன்மார்க்க மகா வித்தியாலயம், கொட்டடி நமசிவாயம் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலும் பரீட்சை இடம்பெறவில்லை இதேவேளை இடம்பெயர்ந்த வேலணைக் கொத்தணி சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி வித்தியாலயம் அதன் முன்னோடிப்பரீட்சையை கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் நடாத்தியது.

இதனால் சுமார் 200 மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர், மாணவர்கள் ஒருநாளைய தவணையை இழந்து விட்டார்கள் என்று ஆசிரியர்கள் குறைப்பட்டுச் சொல்லப்படுகிறது!

மாணவர்களின் கோரிக்கையை நிவர்த்தி செய்யும் வகையில் முன்னோடிப் பரீட்சை வினாத்தாள்களை மாணவர் முன் வாசித்து வாய்மொழிமூலம் பரீட்சை நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## நன்றி நவிலல்

28-10-91 அன்று நடைபெற்ற எமது திருமண வைபவத்திலும் 31-10-1991 அன்று நடைபெற்ற எமது வரவேற்பு விருந்துபசார வைபவத்திலும் கலந்து கொண்டு மணமக்களை ஆசீர்வதித்த அனைவருக்கும் எமது நன்றி


மலேரியம் விராம் அபிவிருத்தி ... பலவும்
சிகிச்சைகள் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்
பட்டுள்ளன என்பதை அறியத்தருகின்றேன்

| சிகிச்சை | நடைபெறும் நாள் |
|---|---|
| குழந்தைகள் சிகிச்சை | ஒவ்வொருசெவ்வாய்க்கிழமையும் |
| வாதம் மற்றும்பொது சிகிச்சை | ஒவ்வொரு வியாழக்கிழமையும் |
| சலரோக சிகிச்சை | ஒவ்வொரு சனிக்கிழமையும் |

இத்துடன் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் பிற்பகல் 2·00 மணி தொடக்கம் 4·00 மணி வரை வெளிநோயாளர் பிரிவுச் சிகிச்சையும் நடைபெறும்.

டாக்டர் ந, கனகசபை
சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர்
(B/3443) யாழ்ப்பாணம்

# 61 ஆம் நாள் நினைவு தினம்



| வீர ஜனனம் | வீர மரணம் |
|---|---|
| 30 | 08 |
| 01 | 09 |
| 1971 | 1991 |

## 2 ஆம் லெப் - சலூஜா
## (கணபதிப்பிள்ளை ரதீஸ்வரி)

நெஞ்சமிது நிமிர்கிறது எதிரியை அழித்திட
வெஞ்சமிது வருந்திசை நோக்கி முன்னேறுவோம்
களம்பலகண்ட வேங்கையாம் சலூஜாவின் குரலிது
களம் காணத் துடிப்பவர் அடிபணிந்து ஒதுங்கள்!

அண்ணா சிலையடி. குடும்பத்தினர்
கரணவாய் தெற்கு. உற்றார், உறவினர்
கரவெட்டி நண்பர்கள் வீரவேங்கைகள்
(B/3445)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 07ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

... மக்கள் முன்னணி மக்களுறவு கொள்கை முன்னெடுப்புப் பிரிவினர் கேட்டுக்கொள்கின்றனர்.

சார்க்

தார். இதனை 'சார்க்' அங்கத்துவ நாடுகளின் தலைவர்களுக்கு அவர் தெரிவித்துள்ளார்.

திட்டமிட்டபடி சகல ஏற்பாடுகளும் பூர்த்தியான நிலையில் 'சார்க்' உச்சி மாநாடு பிற்போடப்பட்டமை சிறிலங்கா அரசாங்கத்தைப் பொறுத்து பெரும் அவமானத்தை ஏற்படுத்தியுள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

நேபாள

விக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நேபாள வானொலி மூலம் அறிக்கை வெளியிட்ட நேபாளிய வெளியுறவு அமைச்சு இதனை அறிவித்தது.

இலங்கைக்கு புறப்படுவதற்கு இரண்டு மணி நேரத்திற்கு முன்பதாகவே நேபாளிய பிரதமர் இந்த முடிவு எடுத்ததாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தியப்

இலங்கை முன்வைத்த யோசனையைப் பல அங்கத்துவநாடுகள் நிராகரித்துள்ளன. இதனாலேயே மாநாடு ஒத்திவைக்கப்பட்டதாகத் தெரிகின்றது.

திரைமறைவில்

ஒம் திரைமறைவில் ஏற்பட்ட இரகசிய உடன்பாடே பூட்டான் மன்னரின் அறிவிப்பிற்குக் காரணம் எனவும் கொழும்பில் உள்ள வெளிநாட்டு தூதரக வட்டாரங்களில் கருதப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியா விரும்பியிருப்பின் பூட்டான் மன்னரை கொழும்பு உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள செய்திருக்கலாம் என்றும், அல்லது பூட்டானின் அதிகாரபூர்வ பிரதிநிதியுடன் மாநாட்டை நடத்த வழிவகை செய்திருக்கலாம் என்றும் அவை தெரிவித்தன

மாநாடு

தீவு, இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளின் அரசுத் தலைவர்கள் நவம்பர் ஏழாம் திகதி முதல் ஒன்பதாம் திகதி வரை கொழும்பில் கூடி உச்சி மாநாட்டை நடத்த திட்டமிட்டிருந்தனர். மாநாட்டிற்குத் தேவையான சகல ஏற்பாடுகளையும் இலங்கை அரசாங்கம் பூர்த்தி செய்திருந்தது

எதிர்பாராத விதமாக உள்நாட்டில் ஏற்பட்ட குழப்ப நிலை காரணமாக பூட்டான் மன்னர் வாங்சுக் நவம்பர் ஏழாம் திகதி முதல் ஒன்பதாம் திகதி வரை நடைபெறும் கொழும்பு மாநாட்டிற்கு வருகை தர முடியாதிருப்பதாக நவம்பர் முதலாம் திகதியன்று சகல அங்கத்துவ நாடுகளுக்கும் அறிவித்திருந்தார்

இவ் வருடம் டிசம்பர் மாதத்திற்கு முன்பாக மீண்டும் ஒரு தடவை 'சார்க்' உச்சி மாநாட்டிற்கு ஏற்பாடு செய்வது இலங்கைக்கு சிரமமாக இருப்பதாக 'சார்க்' நாடுகளின் தற்போதைய தலைவரான மாலைதீவு ஜனாதிபதி மாமூன் அப்துல் கயூமுடனும் ஏனைய அரசுத் தலைவர்களுடனும் தொடர்பு கொண்டு சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்திருந்தார். அதனால் பூட்டான் மன்னரின் உயர் பிரதிநிதி ஒருவர் வருகைதரும் பட்சத்தில் உச்சி மாநாட்டை நடத்தலாமென பிரேமதாசா அரசாங்கம் முன்வைத்த யோசனையை நிராகரித்த இந்திய அரசாங்கம் உச்சி மாநாட்டில் சகல அரசாங்கத் தலைவர்களும் பிரசன்னமாக இருக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தியது. இதனால் 'சார்க்' அமைப்பின் கோட்பாடுகளுக்கிணங்க ஏகமனதாக இணக்கம் காண இயலவில்லை, இதனால் கொழும்பில் தற்போது ஆறாவது சார்க் உச்சி மாநாட்டை நடத்துவதற்கான சூழ்நிலை இல்லையென இலங்கை அரசாங்கம் கவலையுடன் அறிவித்துள்ளது. இவ்வாறு வெளிநாட்டமைச்சு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் அரசுத்தலைவர்கள் தனித்தனியே ஜனாதிபதி பிரேமதாசாவை சந்தித்து இருதரப்பு விவகாரங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடவுள்ளனர்.

... முன்னோடிப் பரீட்சை விஷேசதினங்களை மாணவர் முன்வாசித்துவரப் மொழிமூலம் பரீட்சை நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.


## நன்றி நவிலல்

28-10-91 அன்று நடைபெற்ற எமது திருமண வைபவத்திலும் 31-10-1991 அன்று நடைபெற்ற எமது வரவேற்பு விருந்துபசார வைபவத்திலும் கலந்து கொண்டு மணமக்களை ஆசீர்வதித்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சிவமூர்த்தி மஞ்சுளா ரஜனி தம்பதிகள்,
(R/1916) வீடியோ கலா மினி அச்சுவேலி

# 51 ம் நாள் நினைவஞ்சலியும்
## அந்தியேட்டி அழைப்பும்

8-11-1991



| தாயின் மடியில் | தாயக மண்ணில் |
|---|---|
| 7-11-73 | 19-9-91 |

வீரவேங்கை
## பிருந்தன்
(சுந்தரலிங்கம் இந்திரலிங்கம்)

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். உற்றார், உறவினர் அனைவரையும் அழைக்கின்றோம்.

அல்வாய் வடக்கு, உனது பிரிவால் துயருறும்
வியாபாரி மூலை, அப்பா, அம்மா,
பருத்தித்துறை. அக்கா, தங்கை, தம்பி.
(R/1918)